**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.19/2022** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : | **P.W. 2** |
| | Defence | : | **D.W.** |
| | Court | : | **C.W.** |

| **Name :** | அழகம்மாள் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **08.08.2025**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

என் கணவர் பெயர் சுப்ரமணியன். வழக்கில் இறந்துபோன கருப்பையா என் பெரியமகன். எதிரி தினேஷ் என் மகன் வழி பேரன் ஆவார். கருப்பையாவை தினேஷ் குத்திவிட்டார். நான் அதே கொல்லையில் என்னுடைய கொட்டாயில் படுத்துஇருந்தேன். சத்தம்கேட்டது. வாசற்படி அருகே குத்திவிட்டார். என்னுடைய சின்னமகனையும் தினேஷ் குத்திவிட்டார். ரத்தம் ஓட ஓட அதை பிடித்துக்கொண்டு என்சின்னமகன் கரம்பியம் ஓடிவிட்டார். அங்கு போய் சொன்னபின்னர் என்சின்ன பேரனும், இன்னொருவரும் அவரை தேடி சென்றார்கள். உட்கார்ந்த நிலையில் என்மகன் இறந்துவிட்டதாக தூக்கிவந்தார்கள். தூக்கிவந்து சாலைக்கு அருகில் கிடத்தினார்கள். எங்கள் கொல்லையை சுற்றி வேறு யாரும் இல்லை. நாங்கள் மட்டும் இருந்தோம். என்சின்னமகனை ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள். என்சின்னமகன் தான் போலிசில் கம்பளைண்ட் கொடுத்திருப்பான். சம்பவம் நடக்கும் போது இராத்திரி. அரவம் அடங்கி விட்டது. பேரப்பிள்ளைகளுக்கு ஆகட்டும் என்று என்அப்பா

வீட்டு சொத்தை நான் எழுதி வைத்தேன். அதை விற்க வேண்டுமென்று தகராறு செய்து குத்திவிட்டார். என் சின்னமகன் தான் தற்போது என்னை பார்த்து வருகிறார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் உடனே விசாரித்துவிட்டார்கள். தற்போது நான் முதல்விசாரணையில் சொன்னது போன்று அவர்களிடம் சொன்னேன். எனக்கு 10, 20 வருடங்களாக சரியாக கண் தெரியாது. ஒரு கண் தெரியாது. மற்றொரு கண் தற்போது சரியாக தெரிவதில்லை. கருப்பையா வெளிநாட்டிற்கு போனார். எதிரிக்கு சுமார் 10 வயது இருக்கும்போது அவர் தாயார் இறந்துவிட்டார். எதிரியின் தாயார் இறந்தபின்னர் கருப்பையா கனகாவுடன் சேர்ந்து இருந்தார் என்றால் அப்பப்ப போய் கொண்டு தனியாக இருந்ததால் பொங்கி தின்றார்கள். அம்மாதிரி இல்லை. கருப்பையா காசு குறியிலேயே இருப்பார். கை நிறைய சம்பாரிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார். வெளிநாட்டில் இருக்கும்போது கனகாவிற்கு கருப்பையா பணம் அனுப்புவார். வெளிநாட்டில் இருந்து வந்த பின்னர் பணம் அனுப்பியது என்ன ஆனது என்று கேட்டு அவர்களுக்குள் ஒரு பஞ்சாயத்து நடந்தது என்றால் சரியல்ல. குத்தியதை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. என்சின்ன மகனை புகார் கொடுத்ததால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சம்பவத்தை பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கருப்பையா சொத்தை நானும், என்சின்னமகனும் அனுபவிக்கிறோம் என்றால் என் சொத்தை நான் அனுபவிக்கிறேன்.

<u>மறுவிசாரணை</u>: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.